DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–105/2023

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வடிவேல் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

23.02.2026 – 04.50 PM

முதல் விசாரணை:–

1. நான் சேரந்தை கிராமத்தில் குடியிருந்து வாலிநோக்கத்தில் உள்ள தமிழ்நாடு அரசு உப்பளத்தில் ஒப்பந்த தொழிலாளராக வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன வீரனை தெரியும். அவரும் உப்பளத்தில் தான் வேலை செய்தவர் ஆவார். அ.சா.1, 2 ஐ தெரியும். பட்டியல் சாட்சிகள் 4 ஐ எனக்கு தெரியும்.

2. கடந்த 09.03.2023ம் தேதியன்று நானும், தங்கமும் மற்றும் சில நபர்கள் வேலை முடித்து விட்டு இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக வீரன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். நாங்கள் இரு சக்கர வாகனத்தில் அவருக்கு பின்னால் சேரந்தையை நோக்கி சென்று சென்று கொண்டிருந்தோம். அப்போது விபத்து ஏற்படுத்திய வாகனமானது எங்களை முந்தி சென்றது. அந்த வாகனமானது டீசல் ஏற்றிச்சென்ற நான்கு சக்கர வாகனமாகும். அந்த வாகனமானது எங்களை முந்திச்சென்று வேகமாக சென்று முன்னால் ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்த சைக்கிளின் மீது படார் என மோதியது.

3. உடனே எங்கள் வாகனத்தை நிறுத்தி பார்த்த போது வீரனுக்கு பின்தலையிலும், வலது காலிலும் அடிபட்டு இருந்தது. உடனே இச்சம்பவம் பற்றி

அவருடைய மனைவி உமையம்மாளுக்கும், 108 ஆம்புலன்சிற்கம், காவல் துறையினருக்கும் தகவல் சொன்னோம். அப்போது விபத்து ஏற்பட்ட நேரம் மதியம் 12.15 மணி ஆகும். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் பார்த்தேன். அந்த வாகனத்தின் பதிவெண் TN 65 AV 7269 ஆகும். மேற்படி வாகனத்தை எதிரி 40 மீட்டர் துாரம் தள்ளி நிறுத்தினார். அந்த வாகன பதிவெண்ணை குறித்துக்கொண்டு அவரிடம் ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டேன், அவர் அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு போன் செய்து விட்டு அங்கிருந்து சென்று விட்டார். இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை தெரியும். அவர் நீதிமன்றத்திலிலுள்ள ஆஜர் எதிரி தான். அவரது பெயர் அகமது.

4. அப்போது சிறிது நேரத்தில் வீரனின் மனைவி வந்து விட்டார். அதன்பிறகு நான் தங்கம் அரசபாண்டி மூவரும் சேர்ந்து வீரனை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அன்று மாலை வீரன் இறந்து விட்டதாக கேள்விபட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா.1 மற்றும் நான் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். எல்லாரும் ஒரே இடத்தில் தான் வேலை செய்கிறோம் என்றால் சரிதான். காலை 06.00 மணிக்கு சென்றுவிட்டு மதியம் 12.00 மணிக்கு வேலை முடித்து விட்டு திரும்புவோம் என்றால் சரிதான். எங்கள ஊர்க்கார்கள் மொத்தம் சுமார் 80 பேர் உப்பளத்தில் வேலை செய்து வருகிறோம். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எத்தனை நபர்கள் வந்து கொண்டிருந்தோம் என்றால் சுமார் 8 நபர்கள். உப்பளத்தில் 12 மணிக்கு வேலை முடிந்த பிறகு நேரடியாக எங்கள் ஊர் சேரந்தைக்கு தான் சென்றோம் என்றால் சரிதான். நான் சம்பவ தினத்தில் டீக்கடையில் டீ குடித்துகொண்டிருந்தேனா என்றால் இல்லை. இறந்து போன வீரன் டீ குடித்து இருப்பதாக கேள்விபட்டேன். வீரனின் மனைவி செல்போன் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வீரனின் மனைவிக்கு சம்பவத்தை பற்றி நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான. நான் எனது அண்ணனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். எனது அண்ணன் வீரனின் மனைவிக்கு தகவல் சொன்னார். சம்பவம் நடந்த இடத்திற்கும் உப்பள நிறுவனத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். உப்பளத்திலிருந்து வாலிநோக்கம் விலக்கு செல்லும் சாலை வளைவான சாலையா என்றால் இல்லை நேரடியாக செல்லக்கூடிய சாலை தான். சம்பவம் நடந்த சாலை குறுகலான சாலை என்றால் சரியல்ல. அகலமான சாலை தான். அந்த பாதையில் அதிகமான போக்குவரத்து உள்ள பகுதியா என்றால் இல்லை. வாலிநோக்கம் விலக்கு பகுதியிலிருந்து உப்பளம் நோக்கி செல்லும் சாலை அதிகமான வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான்.

உப்பள நிறுவனம் அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். பெரும்பாலும வேகத்தடையில் வாகனங்கள் மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வேகத்தடை எதுவும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே கிருஷ்ணாபுரம் செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த விலக்க ரோட்டிலிருந்து அதிகமான நபர்கள் வேலைக்கு வருவார்கள் என்பதால் வாகனங்கள் அந்த பகுதியில் மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்ற காவலர்கள் விசாரித்தார்கள். புகார்தாரர் இழப்பீடு பெற வேண்டி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி